<u>**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**</u>

**முன்னிலை: திரு. இரா. இராஜசேகரன், எல்.எல்.எம்,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

<u>**குற்ற எண்.148/2026 இல்**</u>

<u>**குற்றப்பல்வகை மனு எண்.220/2026**</u>

சக்திவேல் வயது 40/2026
த/பெ.ராமசந்திரன்
கதவு எண்.02/203
தெற்கு தெரு
கீழப்பெரம்பலூர் கிராமம்
குன்னம் வட்டம்
பெரம்பலூர் மாவட்டம் ... மனுதாரர்/வாகன உரிமையாளர்

/எதிர்/

மாநில அரசு சார்பில்
காவல் ஆய்வாளர்,
குன்னம் காவல் நிலையம்,
குற்ற எண்.148/2026 ... எதிர் மனுதாரர்/குற்ற முறையீட்டாளர்

இம்மனு 02.06.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.P.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் காவல் துறையினரால் உரிய பதில் தரப்பட்டும், இருதரப்பு வாதம் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

<u>உத்தரவு</u>

1. இம்மனுவானது மனுதாரரால் 497, 503 BNSS-ன் கீழ் மேற்கண்ட குற்ற எண்ணில் குன்னம் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்ட TN 46 AY 9057 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா & மகேந்திரா 575D1 டிராக்டர் டிப்பருடன் கூடிய வாகனத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் பின்னிட்டு வழக்குச் சொத்தை இடைக்காலமாக மனுதாரரிடம் ஒப்படைக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில் மேற்கண்ட குற்ற எண்ணில் காவல் துறையினரால் கைப்பற்றப்பட்ட TN 46 AY 9057 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா & மகேந்திரா 575D1 சிவப்பு கலர் டிராக்டர் டிப்பருடன் கூடியது, அதன் Engine No.NKZCO1344, Chassis

No.NKZCO1344 என்ற வாகனம் மனுதாரருடையது என்றும், தனது வருமானத்திற்காக விவசாய வேலைக்கு பயன்படுத்தி வருவதாகவும், அதன் மூலம் கிடைத்த வருமானத்தை கொண்டு ஜீவனம் செய்து வருவதாகவும், தான் கடந்த 12.04.2026 அன்று தனது ஊரில் உள்ள பொது கோவில் கட்டுவதற்கு வேண்டி அஸ்திவாரம் தோண்டப்பட்டு அந்த மண்ணை ஊர் பொதுமக்கள் கேட்டுக் கொண்டதால் ஜே.சி.பி. மூலம் எடுத்து வேறு ஒரு பொது இடத்தில் கொட்டியதாகவும், தான் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் எடுக்கப்பட்ட மண்ணை விலைக்கு விற்கவில்லை என்றும், கோவில் கட்டுவதற்கு இடையூறாக இருந்ததால், அந்த மண்ணை எடுத்து வேறு ஒரு இடத்தில் கொட்டி வைப்பதற்காக எடுத்துச் சென்றதாகவும், அப்போது அந்த வழியாக வந்த காவல் துறையினர் தாங்கள் மண்ணை எடுத்து பணத்திற்காக விற்பனை செய்வதாக தவறாக புரிந்து கொண்டு தங்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்காவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத, நஷ்டமும், கஷ்டமும் ஏற்படும் என்றும், மேற்படி டிப்பருடன் கூடிய டிராக்டர் வாகனம், காவல் நிலையத்தில் மழை, வெயில் போன்ற இயற்கை காரணங்களால் பாதிக்கப்பட்டு பழுதாகி வாகனத்தை இயக்க முடியாமல் போய்விடும் என்றும், நீதிமன்றம் மேற்கண்ட வாகனத்தை கோரும் பட்சத்தில் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாகவும், எனவே, மேற்படி வாகனத்தை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க உத்தரவிட்டும் பின்னிட்டு அதனை இந்த மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைப்பு செய்ய உத்தரவிடவேண்டியது அவசியம் எனவும் வாதிடப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரரான காவல் துறையினர் தரப்பில் புலன் விசாரணை முடிவடையாமல் இருப்பதாலும், எதிரியிடம் வழக்குச் சொத்தை ஒப்படைத்தால் எதிரி வழக்குச் சொத்தை விற்கவோ, தடயங்களை கலைக்கவோ அல்லது உருமாற்றம் செய்யவோ கூடும் என்பதாலும், மேலும் இதே போல் மீண்டும் மேற்படி வழக்குச் சொத்தைப் பயன்படுத்தி குற்ற செயலில் ஈடுபடக் கூடும் என்றும், எனவே, வழக்குச் சொத்தை வாதியிடம் ஒப்படைக்க கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதங்களும் கவனமாக கேட்கப்பட்டு வழக்காவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் குன்னம் காவல் நிலைய குற்ற எண்.148/2026 இல் உள்ள வழக்கில் குன்னம் காவல் உதவி ஆய்வாளர்

மனுதாரருக்கு சொந்தமான TN 46 AY 9057 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா & மகேந்திரா 575D1 சிவப்பு கலர் டிராக்டர் டிப்பருடன் கூடியது, அதன் Engine No.NKZCO1344, Chassis No.NKZCO1344 என்ற வாகனம் வழக்குச் சொத்தாக கைப்பற்றப்பட்டுள்ளது வழக்கு கோப்பினை பரிசீலித்ததில் தெரியவருகிறது. மேலும் இவ்வழக்குச் சொத்தானது மனுதாரருக்கு உரிமைப்பட்டது அல்ல என்று எந்த ஒரு ஆட்சேபணையும் அரசுத் தரப்பில் இருந்து முன் வைக்கவில்லை. மேலும் சுந்தர்பாய் அம்பாள் எதிர் குஜராத் மாநிலம் வழக்கின்*[ 2003 SCC(Crl)1440 ]* உச்ச நீதிமன்ற தீர்ப்புரையின்படி மனுதாரருக்கு சொந்தமான TN 46 AY 9057 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா & மகேந்திரா 575D1 சிவப்பு கலர் டிராக்டர் டிப்பருடன் கூடியது, அதன் Engine No.NKZCO1344, Chassis No.NKZCO1344 என்ற வாகனத்தை மனுதாரரிடம் ஒப்படைப்பதால் வழக்கின் விசாரணைக்கு எவ்விதத்திலும் குந்தகம் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, குன்னம் காவல் துறையினர் இந்த உத்தரவு தேதியிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் மேற்படி வழக்குச் சொத்தை எண்ணிடுவதற்கு இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 02 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJASEKARAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.06.02 11:54:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.